தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வேளாண் விரிவாக்கத் திட்ட தொடக்க விழா

ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை திட்டத்தின் கீழ் குழு சார்ந்த நிரந்தரப் பயணத் திட்டம் தொடக்க விழா மோகனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆரியூர், ஒருவந்தூர் ஊராட்சிகளில் அண்மையில் தொடக்கி வைக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) லோகநாத பிரகாசம் முன்னிலை வகித்தார். குழு சார்ந்த நிரந்தரப் பயணத் திட்டம், வேளாண் உதவி அலுவலர் பணிகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப் பட்டது. மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் திட்டங்கள், விவசாயிகளுக்குத் தேவையான உயர் தொழில்நுட்பங்கள், அரசு வழங்கும் மானியத் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. மோகனூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் கந்தசாமி, வேளாண் அலுவலர் ஹேமலதா ஆகியோர் அரசின் பல்வேறு திட்டங்கள், செயல் விளக்கத் திடல், விதைப் பண்ணை அமைப்பால் ஏற்படும் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினர். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் மோகன்ராஜ், ராதாகிருஷ்ணன் ஆகியோர் செய்தனர்.

### போச்சம்பள்ளி விற்பனைச் சங்கத்தில் ரூ.13 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

போச்சம்பள்ளி கூட்டுறவு வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனைச் சங்கத்தில், 1,100 பருத்தி மூட்டைகள் ரூ. 13 லட்சத்துக்கு புதன்கிழமை ஏலம் போயின. போச்சம்பள்ளியில் எஸ்.495 கிருஷ்ணகிரி வட்ட வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் புதன்கிழமை 4-ஆவது வாரமாக பருத்தி ஏலம் நடைபெற்றது. ஏலத்துக்கு, வரலட்சுமி, பொன்னி ஆகிய ரகங்களைச் சேர்ந்த 1,100 பருத்தி மூட்டைகளை சுற்றுப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், ஒரு குவிண்டால் வரலட்சுமி ரூ.4,500 முதல் ரூ.4,936 வரையும், பொன்னி ரூ. 3,900 முதல் ரூ.4,090 வரையும்

ஏலம் போயின. இதில், விற்பனைக்கு வந்த 1,100 பருத்தி மூட்டைகளும் ரூ. 13 லட்சத்துக்கு ஏலம் போயின. ஏலத்துக்கு, சேலம், அரூர், அவிநாசி, ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏராளமான வியாபாரிகள் கலந்து கொண்டனர். இதுகுறித்து விற்பனைச் சங்கத் தலைவர் தூயமணி கூறியது: கடந்த வாரம் புதன்கிழமை 550 பருத்தி மூட்டைகள் ஏலத்துக்கு வந்தன. இவை ரூ.9.40 லட்சத்துக்கு ஏலம் போயின. புதன்கிழமை இரு மடங்காக 1,100 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. ரூ.13 லட்சத்துக்கு ஏலம் போயின. விவசாயிகளுக்கு ஏலம் முடிந்ததும் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது என்றார்.

## தருமபுரியில் ரூ.54 லட்சத்தில் தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை

தருமபுரியில், ரூ.54 லட்சத்தில் விவசாயிகள் தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்ட அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளதாக, மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தெரிவித்தார். தருமபுரி மாவட்டத்தில், பட்டு வளர்ச்சித் துறை சார்பில், மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை புதன்கிழமை ஆய்வு செய்த அவர் செய்தியாளர்களிடம் கூறியது: தமிழகத்தில் பட்டுக்கூடு பரிவர்த்தனையில் தருமபுரி பட்டுக்கூடு அங்காடி முன்னிலை வகிக்கிறது. இந்த அங்காடிக்கு பிற மாவட்ட பட்டு விவசாயிகளும் பட்டுக் கூடுகளை விற்பனைக்காகக் கொண்டு வருகின்றனர். இங்கு தினசரி 50 முதல் 100 பட்டு விவசாயிகளும், 25 முதல் 35 பட்டு நூற்பாளர்களும் பட்டுக்கூடு ஏலத்தில் கலந்து கொண்டு நாள் ஒன்றுக்கு 3 டன் முதல் 5 டன் வரை பட்டுக்கூடுகள் வர்த்தகம் செய்து வருகின்றனர். தருமபுரி மாவட்ட அரசு பட்டுக்கூடு அங்காடியில் 2013-2014-ஆம் ஆண்டில் 215 டன் வெண் பட்டுக்கூடுகள் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன. அதேபோல, 2014-2015-ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் வரை 416 டன் வெண் பட்டுக்கூடுகள் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன. இது சென்ற ஆண்டைவிட 201 டன் அதிகமாகும். 2014-2015-ஆம் ஆண்டிற்கு சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், விவசாயிகள் பட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்கு ஏதுவாக தனி பட்டுப்புழு வளர்ப்புமனை கட்டுவதற்கு தருமபுரி மாவட்டத்திற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதி ரூ. 11 லட்சத்து 92 ஆயிரத்து 500 ஆகும். மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ், விவசாயிகள் தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கு ரூ. 54 லட்சம்

மதிப்பீட்டிலான திட்டக் கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் பட்டு வளர்ச்சியை மேம்படுத்த தருமபுரி மாவட்டத்தில் பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்களுக்கு மல்பெரி நடவு, சொட்டுநீர் பாசனம் அமைத்தல், தனி பட்டுப் புழு வளர்ப்புமனை கட்டுதல், புழுவளர்ப்புத் தளவாடங்கள், பண்ணை உபகரணங்கள் வழங்குதல் என ரூ. 3 கோடியே 50 லட்சம் மதிப்பிலான மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றார். ஆய்வின் போது, மாநில பட்டு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எம்.ஜி.மணிவண்ணன், பட்டுவளர்ச்சித் துறை மண்டல இணை இயக்குநர் என்.சுயம்பு, உதவி இயக்குநர்கள் ஆர்.நாராயணன், சத்தியன், பட்டுவளர்ச்சித் துறை தொழில்நுட்ப களப் பணியாளர்கள் உடனிருந்தனர்.

**<u>மேட்டூர் அணையிலிருந்துபாசனத்துக்கு 9 ஆயிரம் கன அடி தண்ணீர் திறப்பு</u>**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு செவ்வாய்க்கிழமை மாலை முதல் நொடிக்கு 9 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 7 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்த நிலையில், பாசனப் பகுதிகளில் நீருக்கான தேவை அதிகரித்துள்ளதால், செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி முதல் காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 9 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இந்த நிலையில், புதன்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 93.58 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 697 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனம், கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்கு நொடிக்கு 9,400 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 56.83 டி.எம்.சி.யாக இருந்தது. மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறந்து விடப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதால், அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்துவருகிறது.

## பொங்கல் பண்டிகை திருச்செந்துறையில் வாழை சிறப்பு பொது ஏலம்

பொங்கல் பண்டிகையொட்டி, திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் ஜன. 10 மற்றும் ஜன. 12-ம் தேதிகளில் வாழை விற்பனைக்கான சிறப்பு பொது ஏலம் நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிச்சாமி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு : திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டத்துக்குள்பட்ட திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில், பொங்கல் பண்டிகையையொட்டி வாழைத்தார்கள் விற்பனைக்கான சிறப்பு பொது ஏலம் ஜன. 10 மற்றும் ஜன. 12 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த வாழை சாகுபடி விவசாயிகள், காலை 11 மணிக்குள் ஏலத்தில் பங்கேற்று தங்கள் வாழைத்தார்களை பொது ஏலத்தில் விற்பனை செய்து, தரகு ஏதுமின்றி விற்பனைத் தொகையைப் பெறலாம்.

## விவசாயிகளுக்கு விசைத் தெளிப்பான்கள் வழங்கல்...

அரியலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்டத்தின் மூலம் 641 விவசாயிகளுக்கு ரூ. 43.58 லட்சம் மதிப்பிலான விசைத் தெளிப்பான்களை ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் திங்கள்கிழமை வழங்கினார். இதில் திருமானூர், தா. பழூர் வட்டாரங்களில் உள்ள ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்டம் ஐரஙட - 2,5 6,7 ஆகியவற்றில் உள்ளடக்கிய 24 நீர்வடிப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு தலா ரூ. 6800 மதிப்பில் ரூ. 43.58 லட்சம் மதிப்பிலான விசைத் தெளிப்பான்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தீ. சடையப்ப விநாயகமூர்த்தி, மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின் துணை இயக்குநர் ம.செந்தமிழ்ச்செல்வன், வேளாண் உதவி இயக்குநர் அ. பாண்டியன், சம்பந்தப்பட்ட நீர்வடிப் பகுதிகளின் தலைவர்கள் மற்றும் தொடர்புடைய நீர்வடிப் பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## மாயனூர் கட்டளை மேட்டுவாய்க்காலில் பாசனத்திற்கு 40 நாட்கள் தண்ணீர் திறப்பு

மாயனூர் கட்டளை மேட்டுவாய்க்காலில் பாசனத்திற்காக 40 நாட்களுக்கான தண்ணீரை கிருஷ்ணராயபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் செ. காமராஜ் புதன்கிழமை திறந்துவிட்டார். கரூர் மாவட்டம், மாயனூரில் உள்ள காவிரி ஆற்றின் வலதுகரையில் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் பிரிந்து செல்கிறது. இந்த வாய்க்கால் மூலம் திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் நேரடியாக 11,198 ஏக்கர், 107 குளங்கள் மூலம் 9,464 ஏக்கர் என மொத்தம் 20,662 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. வருடத்திற்கு 137 நாட்கள் தண்ணீர் திறக்கப்படும் நிலையில், கடந்த மாதம் 30-ம் தேதி வரை தண்ணீர் திறக்கப்பட்டு பிறகு நிறுத்தப்பட்டது. தற்போது விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப ஜன. 7-ம் தேதி முதல் பிப்ரவரி 15-ம் தேதி வரை வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதன்படி, கிருஷ்ணராயபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் செ. காமராஜ் தண்ணீரை மதகுகள் வழியாக புதன்கிழமை திறந்துவிட்டார். நிகழ்ச்சியில், கிருஷ்ணராயபுரம் ஒன்றியச் செயலாளர் பி.கே. முத்துசாமி, பொருளாளர் சேங்கல்மணி, மாயனூர் ஆற்றுப் பாதுகாப்பு பிரிவு உதவிச் செயற்பொறியாளர் சதீஷ்குமார், கிருஷ்ணராயபுரம் வட்டாட்சியர் வேணி, தேர்தல் வட்டாட்சியர் பிரபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வேளாண் அறிவியல் மையத்தில் தொழில்நுட்ப வார விழா

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள வேளாண் அறிவியல் மையத்தில் தொழில்நுட்ப வார தொடக்க விழா புதன்கிழமை நடைபெற்றது. ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் கே. வரதராஜன் விழாவை தொடக்கி வைத்தார். சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் முனைவர் ஆர். கவிமணி, பருத்தியில் அதிக மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்பங்கள், தற்போது நிலவி வரும் பருவ மாற்றங்களில் இருந்து பயிர்களை பாதுகாப்பது குறித்த நுணுக்கங்கள், தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) ம. இந்திரா, தோட்டக்கலை துறை சார்பில் நடைபெற்று வரும் திட்டங்கள், மானிய திட்டங்கள் குறித்து பேசினர்.

இதில், விவசாயிகளுக்கு பயன்தரக்கூடிய நவீன தொழில்நுட்பங்கள், நவீன வேளாண் கருவிகள் விவசாயிகளின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி வரவேற்றார். தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ஜெ. கதிரவன் நன்றி கூறினார். வேளாண் அறிவியல் மையத்தில் வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் தொழில்நுட்ப வார விழாவில், பருத்தி, மக்காச்சோளம், உயர் தொழில்நுட்ப காய்கறி வளர்ப்பு, சிறுதானியங்கள் மதிப்பு கூட்டுதல் தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பண்ணை முறை, ஜப்பான் காடை வளர்ப்பு மற்றும் புறக்கடை கோழி வளர்ப்பு குறித்த நவீன தொழில்நுட்பங்கள், பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்படுகிறது.

## <u>கொத்தமல்லியில் நவீன தொழில்நுட்பப் பயிற்சி</u>

பெரம்பலூர் மாவட்டம், வாலிக்கண்டபுரத்தில் உள்ள தந்தை ரோவர் வேளாண்மைக் கல்லூரி, கோலிக்கோடு பாக்கு மற்றும் நறுமணப் பயிர்கள் இயக்கம் சார்பில், கொத்தமல்லி சாகுபடியாளர்களுக்கு நவீன தொழில்நுட்பம் குறித்த பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது. முகாமுக்கு, தந்தை ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் கே. வரதராஜன் தலைமை வகித்தார். ரோவர் வேளாண்மைக் கல்லூரி முதல்வர் ஜி. அசாலம் பாஷா, ரோவர் மேலாண்மைக் கல்லூரி இயக்குநர் இரா. சாமிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ஜே. கதிரவன், கொத்தமல்லி சாகுபடியில் நவீன தொழில்நுட்பம் குறித்து பேசினார். முகாமில் பங்கேற்ற அடைக்கம்பட்டி, கண்ணப்பாடி, சத்திரமனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 70 விவசாயிகளுக்கு தலா 5 கிலோ கொத்தமல்லி விதைகள் இலவசமாக வழங்கப்பட்டது. இதில், கல்லூரி நிர்வாக அலுவலர் எஸ். நீலமேகம், அலுவலக மேலாளர் பி. முத்துசாமி, தோட்டக்கலை உதவிப் பேராசிரியர் சி. சங்கர், விதை தொழில்நுட்பவியல் உதவிப் பேராசிரியர் ஏ. ஸ்ரீபுனிதா, உழவியல் துறை உதவிப் பேராசிரியர் எம். சரவணன், வனயியல் உதவிப் பேராசிரியர் ஜி. ஆனந்தன், பண்ணை மேலாளர் ஆர்.சி. பாலு, உதவிப் பேராசிரியர் எம். முருகனந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# <u>பால் வளத்தைப் பெருக்கும் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல்!</u>



பசுக்கள் வளர்க்கும் விவசாயிகள் கம்பி நேப்பியர் ஒட்டுப்புல் என அழைக்கப்படும் சி.என். 4 ரக புல்லை உற்பத்தி செய்து, கால்நடைகளுக்கு கொடுப்பதால் பால் உற்பத்தியை எளிதாகப் பெருக்கலாம். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட இந்த ரகம், குறைந்த பரப்பில் அதிக மகசூல் தரும் புல் ரகமாகும். இந்த தீவனப் பயிரை உற்பத்தி செய்வதால் குறைந்த இடத்தில் அதிக பசுந்தீவன புல்லை உற்பத்தி செய்து பால் உற்பத்தியைப் பெருக்கலாம் என காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் பெ. முருகன் தெரிவித்துள்ளார். அவரது தகவல்கள்: கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், அதிகத் தூர்களுடன் வளரக்கூடிய ஒரு பல்லாண்டு தீவனப் பயிராகும். தண்டுகள் மிகவும் மிருதுவான, இனிப்பான, சாறு நிறைந்த, குறைந்த நார்ச்சத்தைக் கொண்டவை. அதிக தூர்களுடன் (செடிக்கு 30 முதல் 35 தூர்கள்) சாயாத் தன்மை கொண்டது. அகலமான, மிருதுவான இலைகள் அதிக இலை தண்டு விகிதம் கொண்டவை. இவ்வகை பயிரை எளிதில் பூச்சிகள், நோய்கள் தாக்காது. அதிக உலர் தீவன மகசூல், புரதச்சத்து கொண்டவை. ஆண்டுக்கு ஏழு முறை அறுவடை செய்யலாம். இதனால் ஏக்கருக்கு 350 முதல் 400 டன் அளவுக்கு மகசூல் பெறலாம். பசுந்தீவனத்தின் முக்கியத்துவம்: கால்நடைகளுக்குப் பசுந்தீவனப் புற்கள் கொடுப்பதால் பால் உற்பத்திக்கு தேவையான வைட்டமின் ஏ எனும் உயிர்ச்சத்து கிடைக்க வழிவகை ஏற்படுகிறது. கால்நடைகளின் கண்பார்வை, சுவாச மண்டலத்தின் செயல்பாடுகள் மேம்படுகிறது. மேலும், கால்நடைகளின் கரு உருவாவதற்கும், உருவான கருவைத் தக்க வைப்பதற்கும் பசுந்தீவனப் புற்கள் வழிவகை செய்கின்றன. சாகுபடி தொழில்நுட்பம்: ஆண்டு முழுவதும் எல்லா வகை மண் வகைகளிலும் அனைத்து மாவட்டங்களிலும் இந்தப் புல்லைப் பயிரிடலாம். நிலத்தை இரும்புக் கலப்பையைக் கொண்டு 2 அல்லது 3 முறை நன்கு உழவு செய்ய வேண்டும். நிலத்தைப் பண்படுத்திய பிறகு 60 செ.மீ. இடைவெளியில் பாத்திகள் அமைக்க வேண்டும். மண் பரிசோதனை செய்து

மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறு உரங்களை இட வேண்டும். மண் பரிசோதனை செய்யாவிட்டால், 1 ஏக்கருக்கு அடியுரமாக 25 டன் மக்கிய தொழுஉரம், 75 கிலோ தழைச்சத்தை அடியுரமாக இடுவதால் மகசூலை நிலை நிறுத்தலாம். பாத்திகள் அமைக்கப்பட்ட நிலத்தில் நன்கு நீர்ப் பாய்ச்சிய பின் தண்டுக்கரணையை 60-க்கும் 50 செ.மீ. இடைவெளியில் செங்குத்தாக நடவு செய்ய வேண்டும். இவ்வாறு நடவு செய்தால் ஒரு ஏக்கருக்கு 33 ஆயிரத்து 333 கரணைகள் தேவைப்படும். கரணை நட்ட 3ஆவது நாளில் உயிர் நீர்ப்பாசனம் கொடுக்க வேண்டும். பிறகு 10 நாள்களுக்கு 1 முறை நீர்ப்பாசனம் கொடுக்க வேண்டும். கரணை நட்ட 20ஆவது நாள் ஒரு கைக்களை எடுக்க வேண்டும். நடவுக்குப் பின் 75 முதல் 80 நாள்களில் முதல் அறுவடையும், அடுத்தடுத்து 45 நாள்களிலும் தீவனப் பயிர்களை அறுவடை செய்யலாம். இவ்வாறு சாகுபடி மேற்கொண்டால், 1 ஹெக்டேரில் 1 ஆண்டுக்கு 7 அறுவடைகளில் 350 முதல் 400 டன் பசுந்தீவன மகசூல் உற்பத்தி செய்யலாம். எனவே கறவைமாடு வளர்க்கும் விவசாயிகள் குறைந்தபட்ச நிலத்திலாவது, கோ (சிஎன்) 4 ரக புல்லை உற்பத்தி செய்து, கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் பால் உற்பத்தியை எளிதாக பெருக்கலாம். மேலும் நகர்புற அருகில் உள்ள விவசாயிகள் இப்புல்லை உற்பத்தி செய்து, பசும்புல்லை, ஒரு கிலோ ரூ. 3 வரையில் விற்பனை செய்யலாம். இந்தப் புல்லில் தண்டுக்கரணை உற்பத்தி செய்து விற்பதன் மூலம் அதிக வருவாயை ஈட்டலாம். மேலும் விவரங்களுக்கு காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியரை 98844 02613 என்ற கைப்பேசி எண்ணிலோ, 044 - 2745 2371 என்ற தரைவழி தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என்றார் முருகன்.

## <u>குருத்துப் பூச்சியில் இருந்து நெல் பயிரை காப்பது எப்படி</u>



தற்போதைய பருவத்தில் குருத்துப் பூச்சியின் தாக்குதலால், நெல் பயிர்கள் அதிகளவில் சேதம் ஏற்படும் வாய்ப்புள்ளதால், அதற்கான மேலாண்மை முறைகளை விவசாயிகள் கையாள வேண்டும் என திரூர் நெல் ஆராய்ச்சி

நிலையப் பேராசிரியரும், தலைவருமான அகிலா அறிவுறுத்தினார். இதுகுறித்து அவர் கூறியதாவது: திருவள்ளூர் மாவட்டத்தில் குருத்துப் பூச்சியின் தாக்குதல் ஜனவரி மாதத்தில் அதிக அளவில் இருக்கும். இதனால் விவசாயிகள் பெருத்த நஷ்டம் அடைய வாய்ப்பிருக்கும். எனவே விவசாயிகள் கவனத்துடன் தங்களது பயிர்களைக் கண்காணித்து குருத்துப் பூச்சி மேலாண்மை முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். **தாக்குதல் அறிகுறிகள்:** இளம் புழுக்கள் இளம் பயிரின் தண்டில் துளையிட்டு உள் சென்று அதன் அடிபாகத்தில் இருந்து கொண்டு உள் பகுதியைக் கடித்து உண்பதால் இளம் பயிரின் நடுக்குருத்து வாடிக் காய்ந்து விடும். பூக்கும் பருவத்தில் கதிர் காய்ந்து மணி பிடிக்காமல் வெண்ணிறக் கதிர்களாக மாறும். இது வெண்கதிர் சேதம் ஆகும். வாடியக் குருத்து அல்லது வெண் கதிரைப் பிடித்து இழுத்தால் எளிதில் வந்து விடும். பொருளாதார சேத நிலை ஒரு சதுர மீட்டருக்கு இரண்டு முட்டைக் குவியல்கள் ஆகும். காய்ந்த நடுக்குருத்து 10 சதவீதமும், வெண்கதிர் 2 சதவீதமும் ஏற்படும். **மேலாண்மை முறைகள்:** அறுவடை செய்தபின் தாள்களை மடக்கி உழுவதன் மூலம் புழுக்களையும், கூட்டுப் புழுக்களையும் அழிக்கலாம். நடுவதற்கு முன் நாற்றுக்களின் நுனியைக் கிள்ளி முட்டைக் குவியல்களை அழிக்க வேண்டும். மண் பரிசோதனை செய்து வேளாண் அதிகாரிகளின் ஆலோசனையின்பேரில் தழைச் சத்து உரம் இட வேண்டும். மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை வயலில் விளக்குப் பொறி அமைக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 12 வீதம் இனக் கவர்ச்சிப் பொறி அமைக்க வேண்டும். டிரைக்கோகிரம்மா ஜப்பானிக்கம் என்னும் முட்டை ஒட்டுண்ணியை ஒரு வார இடைவெளியில் மூன்று முறை வெளியிடவும். பூச்சித் தாக்குதல் பொருளாதார சேத நிலையை அடையும் போது கீழ்க்கண்ட பூச்சிக் கொல்லிகளுள் ஏதேனும் ஒன்றை ஒரு ஹெக்டேருக்குத் தெளிக்க வேண்டும். மேலும் ப்ளுபென்டிமைடு 39.35 எஸ்.சி 50 மில்லி லிட்டர், கார்டாப்ஹைட்ரோ குளோரைடு 50 எஸ்பி -1000 மில்லி லிட்டர், குளோரன் டிரினிலிப் ரோல் 18.5 எஸ்.சி 150 மில்லி லிட்டர், டிரை அசோபாஸ் 40 625 மில்லி லிட்டர், பிப்ரோனில் 5 எஸ்.சி 1000 மில்லி லிட்டர் ஆகியவை இட வேண்டும்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### திருந்திய நெல் சாகுபடி; வேளாண் அதிகாரி ஆய்வு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த அவதானப்பட்டியில், திருந்திய நெல் சாகுபடி குறித்து வேளாண் இணை இயக்குனர் ஆய்வு மேற்கொண்டார். கிருஷ்ணகிரி வட்டாரத்தில், நவரை பருவத்தில் பெரியமுத்தூர், கங்கலேரி, மாதேப்பட்டி, மூங்கில்புதூர், கூலியம், செம்படமுத்தூர், மற்றும் மலைச்சந்து போன்ற கிராம பகுதிகளில் 4,600 ஹெக்டேர் பரப்பளவில் ஏ.டி.டி-39, என்.எல்.ஆர்-34449, வெள்ளைப்பொன்னி, தானியலட்சுமி, சோனம் போன்ற ரகங்கள் கொண்டு விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி செய்து வருகின்றனர். நேற்று அவதானப்பட்டி கிராமத்தில், வேளாண்மை இணை இயக்குநர் தமிழ்செல்வன் தலைமையில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்ட பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவதானப்பட்டியில், திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்ட வயல்வெளிகளை பார்வையிட்ட வேளாண்மை இணை இயக்குனர் கூறியதாவது: கிருஷ்ணகிரி வட்டாரத்தில் பெரும்பான்மையான பகுதிகளில், இரண்டு போக நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கே.ஆர்.பி., அணை பாசனத்தினால் நிலத்தில் நீர்தேக்கம் தொடர்ச்சியாக ஆண்டு முழுவதும் உள்ளதாலும், மண்ணில் உள்ள துத்தநாக சத்தின் அளவு குறைவதால், இரண்டாவது போக பருவத்தில் பயிரிடப்படும் நெற்பயிருக்கு தேவையான அளவு துத்தநாக சத்து கிடைப்பதில்லை. இதனால் நடவு செய்யப்பட்ட நெற்பயிரில் உள்ள இலைகள் நுனியிலிருந்து வெளிரிய மஞ்சள் நிறத்திலும் நுனிபகுதியில் உள்ள இலைகள் பழுப்பு நிறப்புள்ளிகள் காணப்படும். மேலும் பயிரின் வளர்ச்சி குன்றி காணப்படும். இதனால், பயிரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு தூர்களின் எண்ணிக்கை குறைந்து மகசூல் குறைவு ஏற்படும். இதை நிவர்த்தி செய்ய, மண் பரிசோதனை சிபாரிசு படி உர நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். நடவு வயலில் நன்கு சமன் செய்து நடவிற்கு முன் ஏக்கருக்கு பத்து கிலோ துத்தநாக சல்பேட்டுடன், 20 கிலோ மணல் கலந்து

சீராக நடவு வயலில் தூவ வேண்டும். நடவு செய்யப்பட்ட நிலத்தில், துத்தநாக சல்பேட் பற்றாக்குறை தென்பட்டால், 0.5 சத கரைசல் நடவு செய்த பத்து மற்றும் 25 நாட்களில் மாலை நேரத்தில் தெளித்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் கூறினார். வேளாண் துணை இயக்குனர் பச்சியப்பன், உதவி இயக்குனர் வெங்கட்ராமன் உடனிருந்தனர்.

<u>ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க திட்டம் துவக்கம்</u>

ஊட்டி : ஊட்டி அருகே கல்லக்கொரை கிராமத்தில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க திட்டம் துவங்கப்பட்டது. நீலகிரி மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி வரவேற்றார். நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் துவக்கி வைத்து, பேசுகையில்,"இரண்டாம் பசுமை புரட்சி; இரு மடங்கு உற்பத்தி; மும்மடங்கு லாபம் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து, இத்திட்டம் துவங்கப்படுகிறது. அதன்படி, அனைத்து விவசாயிகளும், அவரவர் விளை நிலத்திலேயே புதிய வேளாண் தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் பயற்சியை பெற முடியும். இது, முழுக்க, முழுக்க விவசாயிகளுக்கு தொழில்நுட்ப உதவி செய்யும் நோக்கில், ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டம். இதன் மூலம், ஒவ்வொரு விவசாயிகளின் மீதும், தனி கவனம் செலுத்தி, தொழில்நுட்ப ஆலோசனைகளை அளிக்க முடியும். இது, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும்," என்றார். விவசாயிகளை நோக்கி : வரையறுக்கப்பட்ட பயணத் திட்டமாக, உதவி வேளாண் அலுவலர்கள் வாரந்தோறும், திங்கள் முதல் வியாழன் வரை, தங்கள் பகுதியில் உள்ள கிராமங்களுக்கு சென்று விவசாயிகளை சந்திப்பர். ஊராட்சி அளவில் அமைக்கப்பட உள்ள, 20 - 25 உறுப்பினர்களை கொண்ட "இரு விவசாய ஆர்வலர்கள் குழு' உதவி வேளாண் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவர்.ஒவ்வொரு உதவி வேளாண் அலுவலருக்கான கிராமங்கள் எட்டு தொகுதிகளாக பிரிக்கப்பட்டு, அவர்கள், இரு வாரங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று விவசாயிகளை சந்தித்து, புதிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்குவர். தோட்டக்கலை துறை மூலம்

வழங்கப்படும் மானிய திட்டங்களுக்கான விண்ணப்பங்களை, விவசாயிகளின் இடத்திற்கே சென்று பூர்த்தி செய்து வழங்குவர்.விவசாயிகள், தங்கள் அனுபவம் மூலம் கண்டறிந்த தொழில் நுட்பங்களை பிற பகுதி விவசாயிகளிடம் பகிர்ந்து கொள்வர். தவிர, வேளாண் விஞ்ஞானிகள் கண்டறியும் புதிய தொழில் நுட்பங்கள் குறித்தும், விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். குறிப்பிட்ட பகுதியின் பயிர் சாகுபடி பரப்பு, பூச்சி, நோய் தாக்குதல், இடுபொருட்கள் குறித்த பரிந்துரைகளை வழங்குவர். அலுவலர்களுக்கு பயிற்சி : தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் மற்றும் துணை இயக்குனர்களுக்கு, மாதத்தின் இரண்டாம் செவ்வாய் கிழமைகளில், தோட்டக்கலை இணை இயக்குனர் தலைமையில், மண்டல அளவிலான பணிமனை கூட்டம் நடத்தப்பட்டு, புதிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சியளிக்கப்படும். பயிற்சி பெற்ற அலுவலர்கள், தங்களின் கீழ் பணிபுரியும், உதவி வேளாண் அலுவலர்களுக்கு அப்பயிற்சியை வழங்குவர். நிகழ்ச்சியில், துணை வேளாண் அலுவலர் சந்திரன் நன்றி கூறினார்.

## <u>திருவண்ணாமலை மாவட்டத்தில் 4,000 பண்ணை குட்டைகள் ரெடி</u>

திருவண்ணாமலை: "விவசாய நில மேம்பாட்டிற்காக, திருவண்ணாமலை மாவட்டத்தில், 4,000 பண்ணை குட்டைகள் அமைக்கப்படும்' என, கலெக்டர் ஞானசேகரன் தெரிவித்துள்ளார். இது குறித்து கலெக்டர் ஞானசேகரன் வெளியிட்ட அறிக்கை: திருவண்ணாமலை மாவட்டம், விவசாயத்தை அடிப்படையாக கொண்ட மாவட்டம் என்பதால், விவசாயிகளின் நிலத்தில் நீர்வளம் எப்போதும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில், தமிழக அரசினால் பண்ணை குட்டைகள் வெட்டும் திட்டம் அறிவிக்கப்பட்டு, ஊரக வளர்ச்சிதுறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பயனாளிகளை கொண்டு ஒவ்வொரு விவசாய நிலத்திலும், 15 மீட்டர் நீளம், 15 மீட்டர் அகலம் என்ற அளவிலும், 5 அடி ஆழத்திலும் பண்ணை குட்டைகள் வெட்டி மழைக்காலத்தில் வரும் நீரினை, சேமித்து வைத்தால், அந்த நிலத்தில் நீர்வளம் எப்போதும் இருக்கும். இதற்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதி திட்டத்தின் கீழ், ஒரு பண்ணைக்குட்டை

ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்ய அரசு அனுமதித்துள்ளது. நீர் நிரம்பிய குளத்தில் மீன் குஞ்சுகள் வளர்த்து, அதன் மூலமும் விவசாயிக்கு வருமானம் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில், 4,000 பண்ணை குட்டைகள் அமைக்க அரசு அனுமதித்துள்ளது. எனவே, சிறு, குறு மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் விவசாயிகள் அனைவரும் அரசின் மிக நல்ல திட்டமான பண்ணைகுட்டைகள் வெட்டும் திட்டத்தை பயன்படுத்தி கொள்ள முன்வர வேண்டும். விருப்பமுள்ள விவசாயிகள் பஞ்சாயத்து அலுவலகம், யூனியன் அலுவலகங்களை உடனடியாக அணுகலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## விவசாயிகள் கூட்டமைப்பு நிர்வாகிகள் ஆலோசனை

திருச்சி: தமிழக விவசாயிகள் கூட்டமைப்பு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், மாநில அமைப்பாளர் குருசாமி தலைமையில், ஸ்ரீரங்கத்தில் நடந்தது. கூட்டத்தில், விவசாய கடன்கள் குறித்த கண்ணோட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். ஒன்றியம் தோறும் நபார்டு வங்கியின் நேரடி கிளைகள் அமைக்க வேண்டும். வேளாண் மானியங்கள், நேரடியாக விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும். நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்த வேண்டும். புதிய நில சீர்த்திருத்த கொள்கையை அமல்படுத்த வேண்டும். நில உடைமை பதிவேடுகள் பராமரிப்பில் மாற்றம் செய்ய வேண்டும், என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கள் இயக்க தலைவர் நல்லசாமி, காவிரி டெல்டா பாசன விவசாயி கள் சங்க செயல் தலைவர் ராஜாராம், மானாவாரி விவசாயிகள் சங்க தலை வர் முருகேசன், இந்திய விவசாய சங்க பொதுச்செயலாளர் தனபதி, மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## தென்னைமர தொழிலாளர்களுக்கு "கிராக்கி'; காந்திகிராமத்தில் பயிற்சி

காந்திகிராமம் : தென்னை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு "கிராக்கி' ஏற்பட்டுள்ளதால் கருவி மூலம் மரம் ஏறுவதற்கு காந்திகிராம பல்கலை அறிவியல் மையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கேரளா, தமிழக மேற்கு மாவட்டங்களில் அதிகளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகின்றன.

தென்னை மரம் ஏறும் தொழிலாளர்கள் பெரும்பாலும் மாற்று தொழிலுக்கு மாறிவிட்டனர். இதனால் இத்தொழிலில் ஆள் பற்றாக்குறை நிலவி வருகிறது. எனவே தென்னை வளர்ச்சி வாரியம், கருவி மூலம் மரம் ஏறுவதற்கு பயிற்சி அளிக்க முன்வந்துள்ளது. முதற்கட்டமாக காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மையத்தில் திண்டுக்கல், திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த 40 பேருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் செந்தில்குமார் கூறியதாவது: சாதாரணமாக ஒருவர் ஒருநாளில் 30 மரங்களே மட்டுமே ஏறமுடியும். ஆனால் கருவி மூலம் 100 மரங்கள் வரை ஏறலாம். உடலில் காயங்கள் ஏற்படாது. இந்த ஆண்டு 100 பேருக்கு பயிற்சி அளிக்க திட்டமிட்டுள்ளோம். ஆறுநாட்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி பெற்றால் பெண்களும் மரம் ஏறமுடியும். பயிற்சி முடிந்தவுடன் ரூ.4 ஆயிரம் மதிப்பிலான கருவி இலவசமாக வழங்கப்படும். பயிற்சி பெற விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலும் விபரங்களுக்கு 90470 54350 ல் தொடர்பு கொள்ளலாம், என்றார்.

## <u>வேளாண் விரிவாக்க திட்ட துவக்க விழா</u>

திருக்கோவிலூர்: திருக்கோவிலூர் வட்டாரத்தில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயண திட்ட துவக்க விழா நடந்தது. திருக்கோவிலூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில், ஒருங் கிணைந்த வேளாண் விரிவாக்க முறை, விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயண திட்ட துவக்க விழா நடந்தது. வேளாண்மை அலுவலர் கவுஸ் வரவேற்றார். மாவட்ட கூட்டுறவு தலைவர் விநாயகமூர்த்தி தலைமை தாங்கி, விழாவை துவக்கி வைத்தார். ஒன்றிய சேர்மன் அறிவழகன் சிறப்புரை ஆற்றினார். உதவி இயக்குநர் நௌஷாத், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் பழனிவேல், ஆத்மா தலைவர் இளங்கோவன் முன்னிலை வகித்தனர். ஊராட்சி தலைவர்கள் ராமசாமி, முருகதாஸ், பாபு, ஏழுமலை மற்றும் முன்னோடி விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர். உதவி விதை அலுவலர் கோவிந்தராஜு, தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர் பாலகிருஷ்ணன், ராஜேஷ் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர். உதவி வேளண்மை அலுவலர் பாக்கியநாதன் நன்றி கூறினார்.

## சந்தையில் மிளகாய் நாற்றுகள் விற்பனை

அவலூர்பேட்டை: அவலூர்பேட்டை வார சந்தையில் நேற்று மிளகாய், கத்தரிக்காய் , தக்காளி உள்ளிட்ட தோட்டப் பயிர்களுக்கான நாற்று செடிகள் விற்பனை நடந்தது. பெரும்பாலும் தோட்டப்பயிர் அமைக்க ஐப்பசி, கார்த்திகை, மார்கழி உள்ளிட்ட மாதங்கள் சீசனாகும். தற்போது அவலூர்பேட்டை வார சந்தையில் மிளகாய் செடிக்கான 150 நாற்றுகளும், தக்காளி செடியின் 100 நாற்றுகளும் ஒரு கட்டு தலா 10 ரூபாய் என விற்பனையானது. இதை நட்டு பராமரித்தால், இரண்டு மாதங்களில் மிளகாய், தக்காளி சாகுபடியாகும், கத்தரிக்காய் செடிக்கான 100 நாற்றுக்கள் உள்ள ஒரு கட்டு 10 ரூபாய்க்கும் விற்றனர். உரிய முறையில் இந்த செடியை பராமரித்தால், மூன்று மாதங்களில் கத்தரிக்காய் கிடைக்கும். கிராம மக்கள் சிறிய அளவில் தோட்டப்பயிர் அமைக்கும் வகையில் சந்தையில் விற்பனையாகும் நாற்று முடிச்சுகளை, ஆர்வத்துடன் வாங்கி சென்றனர்.

## விவசாயிகள் பயணத்திட்டம்பேரங்கியூரில் துவக்க விழா

திருவெண்ணெய்நல்லூர்: திருவெண்ணெய்நல்லூர் அருகே வேளாண்மை துறை சார்பில் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத்திட்ட நிகழ்ச்சி நடந்தது. திருவெண்ணெய்நல்லூர் அடுத்த பேரங்கியூரில் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத்திட்ட துவக்க விழா நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் இளவரசன் தலைமை தாங்கினார்.ஒன்றிய சேர்மன் மகாலட்சுமிஏகாம்பரம், ஊராட்சி மன்ற தலைவர் வேலாயுதம், கூட்டுறவு வங்கி தலைவர் பூராசாமி முன்னிலை வகித்தனர். வேளாண் அலுவலர் பாலமுருகன் வரவேற்றார். இதில், விவசாயிகளுக்கு திட்டத்தின் மூலம் கிடைக்கும் பலன்கள் மற்றும் மகசூல் செய்யும் முறை குறித்து விளக்கமளிக்கப்பட்டது. ஏமப்பூர், இருவேல்பட்டு, சித்தலிங்கமடம், சிறுமதுரை, ஆமூர் போன்ற கிராமங்களில் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத்திட்டம் துவக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது. ஊராட்சி தலைவர் சண்முகம், ஒன்றிய கவுன்சிலர் தமிழ்செல்விஅய்யனார், உதவி வேளாண் அலுவலர்கள் சுதர்சனம், ரவி, தியாகராஜன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சதீஷ், மணிவாசகம் பங்கேற்றனர்.

## உலக விவசாயிகள் தினம் சங்கராபுரத்தில் பரிசளிப்பு

சங்கராபுரம்: சங்கராபுரத்தில் உலக விவசாயிகள் தின விழா கொண்டாடப் பட்டது. சங்கராபுரம் வாசவி மண்டபத்தில் மாவட்ட வேளாண்மை துறை, பாக்ட் உர நிறுவனம் இணைந்து உலக விவசாயிகள் தின விழாவை நடத்தினர். விழுப்புரம்வேளாண்மை இணை இயக்குனர் ராஜாமணி தலைமை தாங்கினார். தோட்டக்கலை துணை இயக்குனர் வீராசாமி முன்னிலை வகித்தார். சங்கராபுரம் பாக்ட் உர விற்பனையாளர் ஜனனி மகாலிங்கம் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குனர்(தர கட்டுப் பாடு) ராமசாமி, பாக்ட் மாநில மேலாளர் முரளிகிருஷ்ணன், பாக்ட் மண்டல மேலாளர் மகேந்திரன், வேளாண்மை அலுவலர்கள் விஜயகுமார், ஆனந்தன், விழுப்புரம் பாக்ட் விற்பனை அலுவலர் ராஜேந்திரன் ஆகியோர் பேசினர். சிறந்த விவசாயியாக தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும், பாக்ட் இயக்குனர் சுப்ரமணியன், பாக்ட் துணை பொதுமேலாளர் ஸ்ரீகுமார், மண்டல மேலாளர் சுப்ரமணியன் ஆகியோர் பவர் ஸ்பிரேயர் பரிசு வழங்கி னர். விற்பனை அலுவலர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## விவசாய விரிவாக்க முறை; விவசாயிகளுக்கு ஆலோசனை

கூடலூர் : விவசாய விரிவாக்க முறை குறித்து விவசாயி களுக்கான ஆலோசனைக்கூட்டம் கூடலூரில் நடந்தது. விவசாயத்துறை இணை இயக்குனர் அசோகன் துவக்கி வைத்தார். விவசாயிகளுக்குத் தேவையான பொருட்களை வாங்குதற்கு மானியம் பெறுவது எப்படி என்பது குறித்து விளக்கப்பட்டது. மேலும் விவசாய அலுவலகத்தில் அதிகாரிகள் இருக்காமல் விளைநிலங்களில் களப்பணிகள் மேற்கொள்ளும் வகையில் நடைமுறை அமல்படுத்தப்பட்டது. பயிர்களின் நோய்கள் தாக்குவதற்கு முன் அதனை தடுப்பது எப்படி என்பதும், விளைபொருட்களை எப்படி மார்கெட்டிங் செய்வது என்பது குறித்து ஆலோசனை களும் வழங்கப்பட்டது. விவசாய உதவி அலுவலர்கள் அம்பிகா, சின்னவெளியப்பன், உதவி விவசாய அலுவலர் வளர்மதி மற்றும் கூடலூர் பகுதியைச்சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## விவசாய அலுவலர்கள் தினமும் விவசாயிகளை சந்திக்க உத்தரவு

தேனி : உதவி விவசாய அலுவலர்கள், ஒவ்வொரு நாளும் ஒரு பகுதியில் உள்ள வயல்களுக்கு சென்று அங்குள்ள வயல்களை பார்வையிட வேளாண்துறை ஏற்பாடு செய்துள்ளது. வேளாண்மை துறையில் பணியாற்றும் அலுவலர் களுக்கும், விவசாயி களுக்கும் உள்ள தொடர்பை வலுப்படுத்தும் நோக்கத்தோடு "விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை குழு சார்ந்த பயண திட்டம்" எனும் திட்டத்தை செயல்படுத்த வேளாண்மை துறை ஏற்பாடு செய்துள்ளது. இதை தொடர்ந்து தேனி மாவட்டத்தில் உள்ள 130 ஊராட்சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.ஒவ்வொரு உதவி வேளாண்மை அலுவலருக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பரப்பை 8 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு நாளும் ஒரு பகுதி என அனைத்து பகுதிகளுக்கும் ஒரு மாதத்தில் இரண்டு முறை சென்று விவசாயிகள் குழுக்களை சந்தித்து, வயல்களை பார்வையிட்டு தேவையான தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்து கூறி வருகின்றனர். இதற்கான ஏற்பாடுகளை தோட்டக்கலை, விவசாய துறையினர் செய்துள்ளனர்.

## விதை விற்பனை உரிமம்

ராமநாதபுரம் : ராமநாதபுரம் விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமாறன் கூறியதாவது: ராமநாதபுரம், சிவ கங்கை மாவட்டங்களில் உள்ள விதை உற்பத்தி யாளர்கள், விற்பனையாளர்கள் விற்பனை உரிமம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். கடந்த 2014 டிச., 12 அறிக்கைப்படி உரிம கட்டணம் ரூ.50 லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. புதுப்பிப்பு கட்டணம் ரூ.20 லிருந்து ரூ.500, தாமத கட்டணம் ரூ.25 லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் புதிய உரிமம் பெற வங்கியில் ரூ.1000 செலுத்தி உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். உரிமம் காலாவதியான 30 நாட்களுக்கு பின் புதுப்பிக்க இயலாது,என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## விருத்தாசலம் பகுதியில் பூச்சி நோய் தாக்குதலில் இருந்து நெற்பயிரை காக்கும் வழிமுறைகள்

விருத்தாசலம், : விருத்தாசலம் வேளாண்மை உதவி இயக்குனர் விஜயராகவன் வெளி யிட்டுள்ள செய்திகுறிப்பு: விருத்தாசலம் வட்டார பகுதியில் நடப்பு சம்பா பருவத்தில் கோ.43, சாவித்திரி, பொன்னி, ஏடிடி 38, சொர்ணாசப்-1, பிபிடி ஆகிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. இதில் கடந்த இரண்டு மாதங்களாக பருவ நிலை மாற்றத்தின் காரணமாக கடும் பனிப்பொழிவு தொடர்ந்து காணப் படுகின்றது. இதனால் பூச்சி நோய் தாக்குதலுக்கு சாதகமான சூழ்நிலை நிலவுகிறது. குலை நோய், கழுத்து குலை நோய் ஆகிய நோய்கள் நெற்பயிரில் காணப்படுகின்றது. குறிப்பாக பிபிடி ரகத்தில் பூச்சி நோய் தாக்குதல் அதிகமாக காணப் படுகின்றது. இதற்கு மாற்று ரகமான ஏடிடி 49, கோஆர் 45, கோஆர் 49, கோ.ஆர் 50, சொர்ணாப்-1, அண்ணா 4 போன்ற ரகங்களை பயிரிட வேண்டும். இந்த ரகங்களை பயிரிடுவதால் மாறுபட்ட பருவ சூழ்நிலையின் காரணமாக பூச்சிநோய் தாக்குதலிலிருந்து தாங்கி வளர கூடியதாகும். பிபிடி ரகத்தில் குலை நோய், கழுத்து குலை நோய் தாக்குதலை கட்டுப்படுத்த வருமுன் காப்போம் என்ற அடிப்படையில் ஒரு ஏக்கருக்கு 200 கிராம் கார்பன்டைசின் அல்லது புரபிகனோசல் 200 மில்லி இவற்றில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். இனி வரும் காலங்களில் பிபிடி ரகத்தை பயிரிடுவதை தவிர்த்து மாற்று ரகங்களை பயிரிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## துத்தநாக சத்து பற்றாக்குறையை போக்க மண் பரிசோதனை அவசியம் வேளாண் அதிகாரி யோசனை

கிருஷ்ணகிரி, : அவதானப்பட்டியில் திருத்திய நெல் சாகுபடியை வேளா ண்மை இணை இயக்குநர் ஆய்வு செய்தார். இதில் துத்தநாக சத்து பற்றாக்குறையை போக்க மண் பரிசோதனை அவசியம் என விவசாயிகளுக்கு அவர் யோசனை தெரிவித்தார். கிருஷ்ணகிரி வட்டாரத்தில் நவரை பருவத்தில் பெரியமுத்தூர்,

கங்கலேரி, மாதேப்பட்டி, மூங்கில்புதூர், கூலியம், செம்படமுத்தூர், மற்றும் மலைச் சந்து உள்ளிட்ட கிராம பகுதிகளில் 4 ஆயிரத்து 600 எக்டேர் பரப்பளவில் ஏ.டி.டி39, என்.எல்.ஆர் 34449, வெள்ளைப்பொ ன்னி, தானியலட்சுமி, சோனம் போன்ற ரகங்கள் கொண்டு விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி செய்து வருகின்றனர். நேற்று அவதானப்பட்டி கிராமத்தில் வேளாண்மை இணை இயக்குநர் தமிழ்செல்வன் தலைமையில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்ட பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவதானப்பட்டி கிராமம் முழுவதும் திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்ட வயல்வெளிகளை பார்வையிட்ட வேளாண்மை இணை இயக்குநர் கூறும் போது, கிருஷ்ணகிரி அணை பாசனத்தினாலும், நிலத்தில் நீர்தேக்கம் தொடர்ச்சியாக ஆண்டு முழுவதும் உள்ளதாலும் மண்ணில் துத்தநாக சத்தின் அளவு குறைவதால் இரண்டாவது போக பருவத்தில் பயிரிடப்படும் நெற்பயிரு க்கு தேவையான அளவு துத்தநாக சத்து கிடைப்பதில்லை. இதனால், நடவு செய்யப்பட்ட நெற்பயிரின் இலைகள் நுனியிலிருந்து வெளிரிய மஞ்சள் நிறத் திலும், நுனிபகுதியில் உள்ள இலைகள் பழுப்பு நிறப்புள்ளிகள் காணப் படும். மேலும், பயிரின் வள ர்ச்சி குன்றி காணப்படும். இதனால், பயிரின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு தூர்களின் எண்ணிக்கை சரிந்து, மகசூல் குறைவு ஏற்படும். துத்தநாக சத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மண் பரிசோதனை செய்து அதன்படி உர நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். நடவு வயலில் நன்கு சமன் செய்து நடவிற்கு முன் ஏக்கருக்கு பத்து கிலோ துத்தநாக சல்பேட்டுடன் 20 கிலோ மணல் கலந்து சீராக நடவு வயலில் தூவ வேண்டும். நடவு செய்யப்பட்ட நிலத்தில் துத்த நாக சல்பேட் பற்றாக்குறை தென்பட்டால் 0.5 சத கரைசலை நடவு செய்த 10 மற்றும் 25 நாட்களில் மாலை நேரத்தில் தெளித்து கட்டுப்படுத்தலாம் என வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கட்ராமன் தெரிவித்தார். இந்த ஆய்வின் போது, வேளாண்மை துணை இயக்குநர்(பொ) பச்சியப்பன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## ஜலகண்டாபுரம் கூட்டுறவு சங்கத்தில் 7 டன் தேங்காய் பருப்பு ரூ 5.99 லட்சத்திற்கு ஏலம்

ஜலகண்டாபுரம், : ஜலகண்டாபுரத்தில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த ஏலத்தில் 7டன் தேங்காய்

பருப்பு ரூ 5.99 லட்சத்திற்கு விற்பனையானது. ஜலகண்டாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க கொங்கணாபுரம் கிளை சேவை மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு வாரந்தோறும் செவ்வாய்கிழமைகளில் நடைபெறும் தேங்காய் பருப்பு ஏலத்தில் காங்கேயம், ஊத்துக்குளி, பெருந்துறை, திருப்பூர், திருச்செங்கோடு, சேலம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் கலந்துகொள்கின்றனர். இதைபோல், இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான சூரப்பள்ளி, ஆவடத்தூர், சின்னசோரகை, பெரியசோரகை, பனிக்கனூர், தோரமங்கலம், கரிக்காப்பட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 122 மூட்டைகளில் 7,041 கிலோ தேங்காய் பருப்புகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். குறைந்த பட்சமாக கிலோ ரூ 84 க்கும் அதிகபட்சமாக ரூ 94.70 க்கும் ஏலம் விடப்பட்டது. மொத்தம் ரூ 5.99 லட்சத்திற்கு ஏலம் போனது. கடந்த வாரம் நடந்த ஏலத்தில் குறைந்த பட்சமாக கிலோ 85 ரூபாய்க்கும், அதிகபட்சமாக 90.60 ரூபாய்க்கும் ஏலம் போனது. இந்த வாரம் சராசரியாக கிலோவுக்கு 4.10 காசுகள் அதிகம் கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## <u>மஞ்சள் விலையேற்றம் எதிரொலி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 4 நாளில் ரூ.4 கோடிக்கு விற்பனை</u>

ஈரோடு, : கடந்த வாரம் மஞ்சள் விலையில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தால் விற்பனைக்கு வரும் மஞ்சளின் வரத்து பல மடங்கு உயர்ந்தது. இதில் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மட்டும் நாள் ஒன்றுக்கு ரூ.1 கோடி என்ற அளவில் விற்பனை நடந்துள்ளது. மஞ்சள் விலையானது கடந்த ஓராண்டுக்கும் மேலாக குவிண்டால் ரூ.6 ஆயிரம் என்ற நிலையிலேயே விற்பனை செய்யப்பட்டு வந்தது. மழை பொழிவு இல்லாததால் ஏற்பட்ட வறட்சியினால் மஞ்சள் சாகுபடி பரப்பளவும் பாதியாக குறைந்திருந்தது. விற்பனைக்கு கொண்டு வரப்படும் மஞ்சளின் வரத்தில் பெரும் சரிவு ஏற்பட்ட போதிலும் விலை ஏறவில்லை. இந்நிலையில் கடந்த வாரம் மஞ்சள் விலையில் ஏற்பட்ட திடீர் மாற்றம் விவசாயிகளை இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்தியது. குவிண்டால் ஒன்றுக்கு திடீரென்று ரூ.3 ஆயிரம் வரை உயர்ந்ததே இன்ப அதிர்ச்சிக்கு காரணம்.

குவிண்டால் ஒன்று ரூ.6 ஆயிரம் என்ற நிலையில் இருந்த மஞ்சள், அதிகபட்சம் ரூ.9669 வரை விற்பனையாது. இதனையடுத்து விற்பனைக்கு கொண்டு வரப்படும் மஞ்சளின் வரத்து கிடுகிடுவென உயர்ந்தது. ஈரோட்டில் ஒழுங்குமுறை விற்பனை கூடம், வெளிமார்க்கெட், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம், சேலம் மார்க்கெட் உள்ளிட்ட மஞ்சள் மார்க்கெட்டுகள் செயல்பட்டு வருகின்றன. இதில், ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் விற்பனை நடைபெற்ற உடனே பணம் பட்டுவாடா செய்யப்படுவதால் ஈரோடு மாவட்டம் மட்டுமில்லாது திருப்பூர், திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் உள்ளிட்ட வெளிமாவட்டங்களில் இருந்தும் அதிக அளவில் விவசாயிகள் மஞ்சள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். கடந்த மாதம் 29ம் தேதியில் இருந்து 2ம் தேதி வரை மட்டும் (1ம் தேதி நீங்கலாக) 500 டன் மஞ்சள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.4 கோடி. விலை வீழ்ச்சியினால் கடந்த மூன்று ஆண்டுகளாக தினந்தோறும் லட்சங்கங்களில் விற்பனை செய்யப்பட்டு வந்த மஞ்சள், திடீர் விலை உயர்வினால் கோடிகளில் விற்பனையானதாகஅதிகாரிகள்தெரிவித்தனர்.

**<u>குலைநோய் தாக்கிய கான்சாபுரம் பகுதியில் வேளாண் அதிகாரிகள் ஆய்வு</u>**

வத்திராயிருப்பு, : வத்திராயிருப்பு அருகே கான்சாபுரம் பகுதியில் குலைநோய் தாக்கிய நெற்பயிர்களை வேளாண்மைத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். வத்திராயிருப்பு அருகே கான்சாபுரம் பகுதியில் நெற்பயிரில் குலைநோய் தாக்கியுள்ளது. அப்பகுதியில் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்தனர். நோயிலிருந்து நெற்பயிர்களை காப்பது குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர். திருவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் விமலா, பூச்சியல்துறை பேராசிரியர் சாந்தி, வத்திராயிருப்பு வேளாண்மை துணை அலுவலர் வேலுச்சாமி மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்கள் ஆய்வில் கலந்து கொண்டனர். குலைநோய் தாக்கிய நெற்பயிரில் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்கள் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர். குலைநோயை கட்டுப்படுத்த ஏக்கருக்கு டிரைசைக்ளோசோல் 200

கிராம் அல்லது கார்பென்டாசிம் 200 கிராம் அல்லது அசாக்ஸிஸ்ரோபின் 200 கிராம் மருந்தை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மேல் உரமாக யூரியா அதிகம் இடுவதை தவிர்க்க வேண்டும். புகையானை கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசிப்பேட் 266-400 கிராம் மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். வயலில் தண்ணீரை வடிகட்டி மருந்தினை தண்டுப்பகுதியில் தெளிக்க வேண்டும்' என தெரிவித்தனர். ஆய்வின்போது கான்சாபுரம் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க திட்டம் கலெக்டர் முனுசாமி தொடங்கி வைத்தார்**



தமிழக அரசின் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க திட்டத்தை சிவகங்கை மாவட்டத்தில் கலெக்டர் முனுசாமி தொடங்கி வைத்தார். வேளாண்விரிவாக்கதிட்டம்

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டம், திருப் பாச்சேத்தியில் விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க திட்டத் தின் தொடக்க விழா மாவட்ட கலெக்டர் முனுசாமி தலை மையில் நடைபெற்றது.விழா வில் புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, செயல் விளக்கங்களை பார்வையிட்டு கலெக்டர் முனுசாமி பேசிய தாவது:– தமிழக முதல்–அமைச்சரால் அறிவிக்கப்பட்ட விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க திட் டத்தின் முக்கிய நோக்கம் இரு மடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம் ஆகியவற்றை விவ சாயிகள் பெற்றிட களப்பணி யாற்றுதலாகும். விளை பொருள் குழுக்களை ஒவ் வொரு கிராமத்திலும் அமைத்து திங்கள் முதல் வியாழன் வரை ஒவ்வொரு பஞ்சாயத்துகளிலும் உதவி வேளாண்மை அலுவலர்கள் காலை 9

மணி முதல் மாலை 5 மணி வரை விவசாயிகளுக்கு தொழில் நுட்ப செய்திகள் குறித்து செயல் விளக்கங்களை செய்து காட்டி விவசாயிகளுக்கு வயல்வெளி பிரச்சினைகள், விவசாயிகளுக்கு தேவையான திட்டங்கள், இடுபொருட்கள் குறித்து ஆலோசனைகள் வழங்குவார்கள்.எனவே விவசாயிகள் தங்கள் பகுதிக்கு வரும் உதவி வேளாண்மை அலுவலர், உதவி தோட்டக் கலை அலுவலர், வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர் ஆகி யோரிடம் ஆலோசனைகளை பெற்று தங்கள் பகுதிக்கு தேவையான தொழில் நுட் பங்கள் மற்றும் வயல்வெளி பிரச்சினைக்கு தீர்வு ஆகிய வற்றை பெற்று தங்களின் உற்பத்தியை பெருக்கி பயனடைய வேண்டும். மண்டலபணிமனைகூட்டம்

ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், சகோதரத்துறை அலுவலர் களுடன் சேர்ந்து மண்டல பணிமனைக் கூட்டம் நடத்தி தொழில் நுட்ப வழிக்காட்டுதல் அடங்கிய கையேடு தயார் செய்து உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு வழங்குவர். இதன் மூலம் விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்களைக் கொண்டு சேர்க்க வேண்டும். இத்திட்டம் சிவகங்கை மாவட்டத்திலுள்ள 445 பஞ்சாயத்துகளிலும் செயல்படுத் தப்படவுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். விழாவில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் குணசேகரன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் சிவதேவ்குமார், வேளாண் கூடுதல் இயக்குனர் சங்கரலிங்கம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுதர்சன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் பாக்கிய லட்சுமி அழகுமலை (திருப்புவனம்), .மாரிமுத்து (மானாமதுரை), துணை இயக்குனர்கள் (வேளாண்மை) அழகப்பன், செல்லப்பாண்டி, உதவி இயக்குனர் (வேளாண்மை) சுரேஷ்பாபு, வேளாண்மை அலுவலர் பரமேஸ்வரன், கூட்டுறவு இணைப் பதிவாளர் பிரபு, தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் வெங்க டேஷ்வரன், உதவி இயக்குனர் கல்யாணசுந்தரம், திருப்பாச் சேத்தி ஊராட்சி ஒன்றியத் தலைவர் தனலெட்சுமி மற்றும் விவசாயிகள், மகளிர் சுயஉத விக்குழு உறுப்பினர்கள்கலந்துகொண்டனர்.

**<u>பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அய்யம்பேட்டையில் வெல்லம் தயாரிக்கும் பணி மும்முரம்</u>**



அய்யம்பேட்டை பகுதிகளில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெல்லம் தயாரிக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. பொங்கல் பண்டிகை அய்யம்பேட்டை பகுதிகளில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அச்சு வெல்லம் தயாரிக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஜாதி, இனம், மொழி என எந்த வேறுபாடும் இல்லாமல் தமிழகம் மட்டுமின்றி அனைத்து பகுதிகளிலும் தமிழர்கள் அனைவரும் பொங்கல் பண்டிகையை கொண்டாடி மகிழ்கின்றனர். பொங்கல் பண்டிகையில் நீங்காத இடத்தைப் பெறுவது வெல்லம். தஞ்சை மாவட்டத்தில் அய்யம்பேட்டையை சுற்றியுள்ள வீரமாங்குடி, தேவன்குடி, மணலூர், கணபதிஅக்ரகாரம், பட்டுக்குடி, மாகாளிபுரம், உள்ளிக்கடை, இலுப்பக்கோரை, கபிஸ்தலம் உட்பட சுமார் 25-க்கும் மேற்பட்ட கிராமங்களில் அச்சு வெல்லம் தயார் செய்யப்படுகிறது. பொங்கலை முன்னிட்டு அய்யம்பேட்டை சுற்றுவட்டார பகுதிகளில் அச்சு வெல்லம் தயாரிக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. அச்சு வெல்லம் தயாரிக்கும் முறைகள் குறித்து மாகாளிபுரத்தை சேர்ந்த விவசாயி எம்.பழனிச்சாமி கூறியதாவது:-

வெல்லம்தயாரிக்கும்முறை

அய்யம்பேட்டை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் வெல்லம் தயாரிப்பதற்காக கோ.32 என்ற ரக கரும்பை சாகுபடி செய்துள்ளோம். இந்த கரும்பினை டிசம்பர் மாதம் முதல் வாரத்திலிருந்து அறுவடை செய்ய தொடங்குவோம். ஆனால் இந்த வருடம் விட்டு விட்டு பெய்த மழையினால் டிசம்பர் மாத கடைசியில் தான் அறுவடை தொடங்கினோம். இந்த கரும்பு அறுவடை மார்ச் மாதம் இறுதி வரை நடைபெறும். ஒரு ஏக்கர் கரும்பிலிருந்து சுமார் 200 சிப்பம் (1 சிப்பம்-30 கிலோ) அச்சு வெல்லம் தயாரிக்கலாம். பழங்காலத்தில் மாடுகளை பயன்படுத்தி கரும்பிலிருந்து சாற்றை பிழிந்து எடுத்து வெல்லம் தயாரித்தனர். ஆனால் தற்போது மின்சார மோட்டார், ஆயில் என்ஜின் ஆகியவை கொண்டு சாறு எடுத்து வெல்லம் தயார் செய்கிறோம்.

அச்சு வெல்லத்திற்கு நல்ல சுவையை பக்குவம் தான் நிர்ணயிக்கிறது. ஆதலால் கரும்பு சாற்றினை நல்ல பக்குவத்துடன் காய்ச்சினால் தான் சுவையான அச்சு வெல்லம் கிடைக்கும். ஒரு நாளில் ஆயிரம் முதல் 1500 கிலோ வரை அச்சு வெல்லம் தயாரிக்கலாம். அச்சு வெல்லத்தின் நிறத்தை பொறுத்து தான் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த ஆண்டு 30 கிலோ கொண்ட ஒரு சிப்பம் ரூ.900 முதல் ரூ.1100 வரை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. உரவிலை, டீசல் விலை, அச்சு வெல்லம் தயாரிக்க மூலப்பொருட்கள் விலை, கூலி ஆட்கள் சம்பளம் இவைகள் கடந்த காலங்களில் பல மடங்கு உயர்ந்து விட்ட நிலையில் வெல்லத்தின் தற்போதைய கொள்முதல் விலை நிலவரம் விவசாயிகளுக்கு கட்டுப்படி ஆகாத நிலையில் உள்ளது. இருப்பினும் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த தொழிலை முழு ஈடுபாட்டுடன் செய்துவருகிறோம். இங்கு தயாராகும் வெல்லம் பழனி, கரூர், மதுரை, தஞ்சை, நாகப்பட்டினம், திருவாரூர் உட்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் ஏற்றுமதியாகிறது. மற்ற மாவட்டங்களில் தயாராகும் அச்சு வெல்லத்தை விட இங்கு தயாராகும் அச்சு வெல்லம் சுவை நன்றாக இருக்கும். அதனால் தான் அனைவரும் இங்கு தயாராகும் அச்சு வெல்லத்தையே விரும்பி வாங்குகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## காங்கயம் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் புகையிலை சாகுபடி

காங்கயம் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் புகையிலை சாகுபடி செய்து வருகின்றனர்.

### புகையிலை சாகுபடி

ஆண்டுதோறும் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நடவு செய்யப்பட்டு தை மாதம் அறுவடை செய்யப்படும் புகையிலை பயிர் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை காங்கயம் பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. தண்ணீர் பிரச்சினை, பராமரிப்பு, விலையின்மை போன்ற காரணங்களால் புகையிலை பயிரிடுவதை விவசாயிகள் படிப்படியாக குறைத்துக் கொண்டு மாற்றுப் பயிர்களில் கவனம் செலுத்தி வருகின்றனர். இந்த நிலையிலும் காங்கயம் அடுத்துள்ள புதுப்பாளையம், காங்கயம் பாளையம், ஊதியூர், செங்கோடம்பாளையம், மரவபாளையம், சித்தம்பாளையம், பகுதிகளில் சில நூறு ஏக்கர் பரப்பில் விவசாயிகள்

புகையிலை சாகுபடி செய்துள்ளனர். இதுபற்றி புகையிலை விவசாயிகள் தரப்பில் கூறியதாவது:–

<u>சாகுபடி குறைந்தது</u>

ஏக்கருக்கு 6 ஆயிரம் நாற்றுகள் வரை நடப்படும் புகையிலை 110 நாள் பயிராகும். உழவு, களையெடுத்தல், சிம்பு எனப்படும் கிளைகள் ஒடித்தல், உரச்செலவுகள் என ஏக்கருக்கு சுமார் ரூ.20 ஆயிரம் வரை செலவாகும். செடியின் விலை சுமாராக ரூ.8–க்கு விற்றாலும் ஏக்கருக்கு ரூ.45 ஆயிரம் வருமானம் கிடைக்கும். செலவு போக நிகர லாபமாக ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் கிடைக்கும் என்றனர். இங்கு விளையும் புகையிலை கொடுவாயைச் சேர்ந்த உள்ளூர் வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு கேரளா மாநிலம் கொல்லம், கோட்டயம், செங்கனச்சேரி உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. அதிகமாக புகையிலை விளைந்த காலங்களில் உள்ளூரிலேயே அவற்றை பதப்படுத்தி வந்தனர். இதற்காக கொடுவாய், வெள்ளியம்பாளையம், குண்டடம் பகுதிகளில் ஏராளமான புகையிலை குடோன்கள் இருந்தன. தற்போது புகையிலை சாகுபடி குறைந்த காரணத்தினால் அவைகள் கல்யாண மண்டபங்களாகவும், மாட்டுத் தொழுவங்களாகவும் மாறிவிட்டன. இவ்வாறு விவசாயிகள் கூறுகின்றனர்.

**<u>வேலூரில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கரும்பு வரத்து அதிகரிப்பு</u>**



வேலூர், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வேலூருக்கு கரும்பு வரத்து அதிகரித்துள்ளது.

<u>கரும்பு</u>

தைத்திருநாளான பொங்கல் பண்டிகை வருகிற 15–ந் தேதி தமிழகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. உழவு தொழிலுக்கு நன்றி கூறும் விதமாக அன்று பொங்கல் வைத்து சூரியனை வழிபடுவார்கள். அப்போது கரும்புகளை முக்கிய படையலாக வைத்து மக்கள் வழிபடுவார்கள். வேலூரில் நேதாஜி மார்க்கெட்டுக்கு கும்பகோணம், திருவாரூர் ஆகிய பகுதிகளில் இருந்து அதிக அளவில் கரும்புகள் வரத்தொடங்கி உள்ளன. இதுபோக மாவட்டத்தின்

பல்வேறு பகுதிகளில் இருந்தும் கரும்புகள் வர தொடங்கி உள்ளன. எனினும் கடந்த ஆண்டை காட்டிலும், இந்த ஆண்டு கரும்பின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

<u>அதிகரிப்பு</u>

கரும்பின் தரத்தை பொறுத்து விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. தடிமன் குறைவாக உள்ள ஒரு கரும்பு கட்டு (10 கரும்புகள்) ரூ.350–க்கும், தடிமன் அதிகமாக உள்ள ஒரு கரும்பு கட்டு ரூ.400 முதல் ரூ.500 வரையும் விற்பனை செய்யப்படுகிறது. 2 கரும்பின் விலை ரூ.70 முதல் ரூ.100 வரை விறப்னை செய்யப்படுகிறது. இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், ‘லாரி வாடகை, ஏற்று கூலி ஆகியவை அதிகரித்து உள்ளதால் இந்த ஆண்டு கரும்பின் விலை உயர்ந்துள்ளது. இதேபோல் மஞ்சள் செடி போன்ற பொங்கல் பண்டிகை பொருட்களின் விலையும் அதிகமாக இருக்கும்’ என்றனர்.